த. நா.ச.பே. எண் : 014 நாள் : 25.09.2015

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கைகள் – **25.9.2015**

---

## பொதுப் பணித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உணவு உற்பத்தியில் தமிழகம் உன்னத நிலையை அடைய வேண்டும் என்பதை குறிக்கோளாகக் கொண்டு, விலை மதிப்பற்ற இயற்கை வளமாகக் கருதப்படும் தண்ணீரை முறையாக பயன்படுத்த ஏதுவாக, பாசன அமைப்புகளுக்கான கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பணிகளை எனது தலைமையிலான அரசு முனைப்புடன் கடந்த நான்கு ஆண்டுகளாக மேற்கொண்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, பொதுப்பணித் துறை மூலம் நடப்பாண்டில் எனது தலைமையிலான அரசு மேற்கொள்ள இருக்கும் பெரும் திட்டங்களை இந்த மாமன்றத்தில் நான் அறிவிப்பதில் பெருமை அடைகிறேன்.

1. கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், பரம்பிகுளம் ஆழியாறு திட்டத்தின் ஆரம்பப் பகுதியான சர்க்கார்பதி மின் நிலையத்தின் இடது புறம் பிரியும் கால்வாய் ஆழியாறு ஊட்டுக் கால்வாய் ஆகும். இவ்வூட்டுக் கால்வாயின் நீளம் சுமார் 13.4 கிலோ மீட்டர் ஆகும். அதன் நீர் கடத்தும் திறன் விநாடிக்கு 280 கன அடி ஆகும். இக்கால்வாய் மூலம் சுமார் 3,900 மில்லியன் கனஅடி நீர் ஆழியாறு அணைக்கும், குடிநீர் தேவைக்கும் எடுத்து செல்லப்படுகிறது. அடர்ந்த மலைப் பகுதியில் செல்லும் இக்கால்வாய் தற்போது சிதிலமடைந்து, நீர் கசிவு ஏற்பட்டு, நீர் கடத்தும் திறன் வெகுவாக குறைந்துள்ளதால் தேவையான நீர் ஆழியாறு அணைக்கு சென்றடைவதில்லை. எனவே, இவ்வூட்டு கால்வாயின் ஆரம்ப பகுதியில் முதல் கட்டமாக 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும். இக்கால்வாயை புனரமைப்பதன் வாயிலாக நேரடியாக 4,666 ஏக்கர் நிலம், கால்வாயின் தலை மடையான சேத்துமடை கால்வாய் மூலம் 5,044 ஏக்கர் நிலம் என மொத்தம் 9,710 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். மேலும், குனியமுத்தூர் பேரூராட்சி, கிணத்துக்கடவு பேரூராட்சி, பொள்ளாச்சி நகராட்சி மற்றும் சுற்று வட்டார கிராமங்களுக்கான குடிநீர் வசதி உறுதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. எனது தலைமையிலான அரசின் விடா முயற்சியின் காரணமாக முல்லை பெரியாறு அணையின் நீர்மட்டம் 136 அடியிலிருந்து முதற்கட்டமாக 142 அடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் கூடுதலாக கிடைக்கக் கூடிய நீரினை உரிய வகையில் பயன்படுத்த பெரியாறு பிரதான கால்வாயின் கிளைக் கால்வாய்களை புனரமைப்பது என முடிவு செய்யப்பட்டு, முதற்கட்டமாக சென்ற ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் மதுரை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள 1 முதல் 4–வது பிரிவு வாய்க்கால், 12–வது பிரிவு வாய்க்கால் மற்றும் பெரியாறு நீட்டிப்பு கால்வாய் ஆகிய 6 பிரிவு வாய்க்கால்கள் 40 கோடி ரூபாய்

மதிப்பீட்டில் புனரமைக்கப்படும் என இம்மாமன்றத்தில் அறிவித்தேன். இதன்படி, இத்திட்டப் பணிகள் தொடங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டத்தின் இரண்டாம் கட்டமாக, மதுரை மாவட்டம், வாடிப்பட்டி, மதுரை வடக்கு, மதுரை கிழக்கு மற்றும் மேலூர் வட்டங்களில் உள்ள பெரியாறு பிரதான கால்வாயின் 5, 6, 8, 9 மற்றும் 11வது பிரிவு வாய்க்கால்களில் புனரமைப்பு பணிகள் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் மூலம், இப்பிரிவு வாய்க்கால்களின் கீழ் ஏற்கனவே உள்ள 33,828 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கப்படுவதுடன், அவற்றின் நீர் கடத்தும் திறன் அதிகரிக்கப்பட்டு கடை மடை பகுதி வரை பாசன வசதி உறுதி செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. கரூர் மாவட்டம், கருப்பம் பாளையம், அப்பி பாளையம் மற்றும் ஆண்டான் கோயில் கிராமவாசிகள் மற்றும் விவசாயிகளின் நீண்ட கால கோரிக்கையை நிறைவேற்றிடும் வகையில், பெரியார் நகர் அருகே ஆண்டான் கோயில் கிராமத்தில், அமராவதி ஆற்றின் குறுக்கே 15 கோடியே 16 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு தடுப்பணை அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தினை நிறைவேற்றுவதன் மூலம் செட்டிபாளையம், அப்பி பாளையம், கருப்பம் பாளையம், சொக்கலியூர், ஆண்டான் பாளையம் மற்றும் விஸ்வநாத புரி ஆகிய கிராமங்களில் உள்ள 220 கிணறுகளின் நிலத்தடி நீர் செறிவூட்டப்படும்.

4. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ராமநதி நீர்த் தேக்கத்தின் உபரி நீரை ஜம்பு நதிக்கு திருப்பும் வகையில் திட்டத்தை செயல்படுத்துமாறு அப்பகுதி பொது மக்கள் நீண்ட காலமாக, கோரிக்கை வைத்து வருகின்றனர். அதனை ஏற்று, திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், ராமநதி அணையின் உபரி நீரை ஜம்பு நதி பாசன பகுதிகளுக்கு திருப்பும் திட்டம் 42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தினால், ஜம்பு நதி அமைப்பிலுள்ள தென்காசி வட்டம், மத்தாளப் பாறை, திப்பணம் பட்டி, ஆவுடையனூர், தெற்கு கடையம், கீழ கடையம் மற்றும் பொட்டல் புதூர் கிராமங்கள் மற்றும் ஆலங்குளம் வட்டம், வெங்கடாம் பட்டி மற்றும் மடதூர் கிராமங்களில் உள்ள 10 கண்மாய்களும்; நீட்டிப்பு கால்வாய் மூலம் 7 கூடுதல் கண்மாய்களும் பயன் பெறும். மேலும், இக்கால்வாய் செல்லும் நேர் பாட்டின் அருகே அமைந்துள்ள 729 கிணறுகள் மூலம் நிலத்தடி நீர் செறிவூட்டப் படுவதனால் 9 கிராமங்கள் பயன் பெறுவதோடு 4,050 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறும். இத்திட்டத்தை செயலாக்குவதற்கு 45.28 ஏக்கர் பட்டா நிலங்கள் கையகப்படுத்தப்பட வேண்டியுள்ளது. முதல் கட்டமாக, நிலம் கையகப்படுத்துதல் மற்றும் விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொள்வதற்காக 5 கோடியே 40 லட்சம் ரூபாய் ஒப்பளிப்பு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், சின்னமனூர் அணைகட்டு மற்றும் அதன் வழங்கு வாய்க்கால், மார்கயன் கோட்டை அணைகட்டு மற்றும் அதன் வழங்கு வாய்க்கால் ஆகியவை 12 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், தேனி மாவட்டம் மற்றும் வட்டம், சீலியம்பட்டி மற்றும் அதன் வழங்கு வாய்க்கால், வீரபாண்டி அணைகட்டு மற்றும் அதன் வழங்கு வாய்க்கால் ஆகியவை 3 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், தேனி மாவட்டம், போடி வட்டம், உப்புக்கோட்டை மற்றும் அதன்

வழங்கு வாய்க்கால் ஆகியவை 1 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் புனரமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. மேட்டூர் கால்வாய் திட்டம் 1955ஆம் ஆண்டு முதல் சேலம், ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் 45,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மேட்டூர் கிழக்கு மற்றும் மேற்கு கரைக் கால்வாய் மண் கரைகளால் ஆனது. மேட்டூர் கிழக்கு கரை கால்வாயின் மொத்த நீளம் 64.40 கி.மீ மற்றும் அதன் நீர் கடத்தும் திறன் 600 கன அடி ஆகும். மேட்டூர் மேற்கு கரை கால்வாயின் மொத்த நீளம் 43.20 கிலோ மீட்டர் மற்றும் அதன் நீர் கடத்தும் திறன் 400 கன அடி ஆகும். இக்கால்வாய்கள் அமைக்கப்பட்டு 60 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்ட நிலையில், இரு பக்கமும் உள்ள கரை சரிவுகளில் தண்ணீர் கசிவு, அதிகமாக உள்ளது. இதனால் கடைமடை பகுதிகளுக்கு உரிய அளவு தண்ணீர் கொண்டு செல்ல முடிவதில்லை. எனவே, எனது உத்தரவின் பேரில் 2014–15ஆம் ஆண்டில், நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் மேற்கு கரை கால்வாயினை 30 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் 7.283 கிலோ மீட்டருக்கும் மற்றும் கிழக்கு கரை கால்வாயினை 19 கோடியே 10 லட்சம் ரூபாய் செலவில் 5.55 கிலோ மீட்டருக்கும் என மொத்தம் 12.82 கிலோ மீட்டர் தூரத்திற்கு கால்வாய் புனரமைப்புப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக, தற்போது சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், மேட்டூர் கிழக்கு கரை கால்வாயில், 7.29 கிலோ மீட்டர் நீளத்திற்கும் மற்றும் நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டத்தில் கடைமடை பகுதியில் 6.33 கிலோ மீட்டர் நீளத்திற்கும் புனரமைக்கும் பணிகள் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள திருநெல்வேலி வாய்க்கால் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே உள்ள சுத்த மல்லி அணைக்கட்டிலிருந்து துவங்கி திருநெல்வேலி மற்றும் பாளையங்கோட்டை நகரங்கள் வழியாக சுமார் 28.42 கிலோ மீட்டர் நீளம் அமைந்துள்ளது. இக்கால்வாய் நகரப் பகுதிகளில் பழுது அடைந்துள்ளதாலும், குறைபாடுடன் இருப்பதாலும், நீர் கடத்தும் திறன் வெகுவாக குறைந்துள்ளது. இதனால், இக்கால்வாயின் மைய பகுதியில் உள்ள கண்மாய்களுக்கும், கடைமடை பகுதிகளுக்கும் நீர் வழங்க இயலவில்லை. எனவே, திருநெல்வேலி நகருக்குள் இக்கால்வாய் கடக்கும் இடங்களில் இரு புறமும் தடுப்புச்சுவர் அமைத்தல், படுகையை கற்காரை லைனிங் செய்தல், மதகுகளை சீரமைத்தல் மற்றும் குறுக்கு கட்டுமானங்களை புனரமைத்தல் ஆகிய பணிகள் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

8. விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டத்தில் வராக நதி ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள செவல புரை அணைக்கட்டிலிருந்து பிரியும் வழங்கு வாய்க்கால் சுமார் 15.92 கிலோ மீட்டர் நீளம் உள்ளது. இதன் மூலம் 15 ஏரிகள் வழியாக பாசன வசதி கிடைக்கப் பெறுகிறது. இவ்வழங்கு வாய்க்காலில் உள்ள குறுக்கு கட்டுமானங்கள் சிதிலமடைந்து உள்ளதால் ஏரிகளுக்கு போதுமான நீர் கிடைப்பதில்லை. எனவே, செவல புரை அணைக்கட்டு மற்றும் அதன் வழங்கு வாய்க்கால் ஆகியவை புனரமைக்கப்படும். இவ்வாய்க்காலுக்கு அருகிலுள்ள அவியூர் சித்தேரி, அவியூர் பெரியேரி மற்றும் தாங்கல் ஆகிய ஏரிகளுக்கு நீர் வழங்க வழிவகை செய்யுமாறு இங்குள்ள பொதுமக்கள் விடுத்துள்ள கோரிக்கையை ஏற்று அவியூர் சித்தேரி,

அவியூர் பெரியேரி மற்றும் தாங்கல் ஆகிய ஏரிகளுக்கு நீர் வழங்க புதிய வாய்க்கால் அமைக்கப்படும். இப்பணிகள் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் ஏற்கனவே உள்ள 15 ஏரிகள் மற்றும் புதிதாக 3 ஏரிகள் ஆகியவற்றின் கீழ் உள்ள சுமார் 2,200 ஏக்கர் நிலங்கள் பாசன உறுதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

9. பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், கொட்டரை கிராமம் அருகே மருதையாற்றின் குறுக்கே நீர்த் தேக்கம் அமைக்கும் திட்டம் 108 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயலாக்கப்படும் என தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் என்னால் 4.4.2013 அன்று இம்மாமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. முதற் கட்டமாக, இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு தேவையான நிலங்களை கையகப்படுத்துதல் மற்றும், விரிவான ஆய்வுப் பணிகள் 23 கோடியே 27 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டு அப்பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளதால், இத்திட்டத்திற்கான கட்டுமானங்களை செயல்படுத்தும் விதமாக 82 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகளை துவங்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

10. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு தரப்பு மக்கள் தங்கள் பகுதியில் உள்ள ஏரிகளை தூர் வாரி புனரமைக்கக் கோரி வருகின்றனர். இதன் அடிப்படையில், வேலூர் மாவட்டத்தில் 53 ஏரிகள், சிவகங்கை மாவட்டத்தில் 19 ஏரிகள் மற்றும் ராமநாதபுரம் மாவட்டத்தில் 33 ஏரிகள் என மொத்தம் 105 ஏரிகள், 54 கோடியே 68 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்படும் என்பதை இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பணிகளை மேற்கொள்வதன் மூலம் 21,750 ஏக்கர் நிலங்கள் பாசன பயன் பெறும்.

11. தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், நெய்வேலி வடபாதி கிராமத்தின் அருகே அக்னியாற்றின் குறுக்கே நிலத்தடி நீரை செறிவூட்ட 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு தடுப்பணை அமைக்கும் திட்டமும், தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், திருவையாறு கிராமத்தில், காவேரி ஆற்றில் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு தள மட்டச் சுவர் கட்டும் திட்டமும் செயலாக்கப்படும். இத்திட்டத்தினால், திருவையாறு, கல்யாணபுரம் மற்றும், ஊமை வாய்கால்களுக்கு கீழுள்ள, 3,290 ஏக்கர் நிலங்கள் பாசன உறுதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

12. சென்னை மாவட்டம், தண்டையார்பேட்டை வட்டம், ராதாகிருஷ்ணன் நகரில் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே, குடியிருப்பு பகுதிகளை இணைக்கும் விதமாக, 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு பாலம் அமைக்கப்படும்.

மொத்தத்தில் 321 கோடியே 69 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் என்னால் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் மூலம் பாசன நிலங்கள் பயன் பெறுவதுடன், வேளாண் பெருங்குடி மக்களும், மீனவ பெருங்குடி மக்களும், பொது மக்களும் பயன்பெறுவர் என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**